# இலங்கை தேசிய நீர்உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபை - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்புக்கள் அபிவிருத்தி அதிகாரசபை 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையிடமுள்ள 7.3749 ஹெக்டேயர்கள் பரப்பளவுள்ள காணி கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டிராததுடன் அச் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலும் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபையிடமிருந்த காணிகளின் பெறுமதி ரூபா 38,100,000 இற்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) உபகரணப் பெறுமானத் தேய்வு நிதிக்கூற்றுக்களில் ரூபா 155,209 ஆல் குறைவாகக் கணிப்பிடப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்தக் கட்டுநிதி உரிய செயற்பாடுகள் பூர்த்தியானதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 42 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,970,866 கூட்டுத்தொகையான உப கட்டுநிதி உரிய செயற்பாடுகள் பூர்த்தியானதை அடுத்து 1 மாதம் முதல் 11 மாதங்கள் வரை காலதாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 21,424,115 பற்றாக்குறையை இதனோடு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 25,754,103 உடன் ஒப்பிடுகையில் ரூபா 4,329,988 ஆல் அதாவது 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. பற்றாக்குறை குறைவடைவதற்கு வருமான அதிகரிப்பு முக்கிய காரணமாகியிருந்தது.

### 2.2 செலவினங்களின் அதிகரிப்பு

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகாரசபையின் செலவினங்களில் பின்வரும் செலவினங்கள் அதிகரித்திருந்தது.

| செலவின விபரம் | 2012 | 2011 | செலவின அதிகரிப்பு சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| நலன்புரிச் செலவினங்கள் | 1,268,398 | 799,444 | 59 |
| தபால் கட்டணங்கள் | 461,123 | 194,997 | 136 |
| ஒப்பந்த சேவைகள் | 3,915,558 | 2,260,708 | 73 |
| ஏனைய வளங்கல்கள் | 1,115,976 | 224,390 | 397 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது கடல் மற்றும் நன்னீர் மீன் உற்பத்தி பின்வருமாறாகக் காணப்பட்டது.

| ஆண்டு | கடல் நீர் மீன் உற்பத்தி | நன்னீர் மீன் உற்பத்தி |
|---|---|---|
| | மெ.தொன் | மெ.தொன் |
| 2009 | 293,170 | 46,560 |
| 2010 | 330,240 | 51,390 |
| 2011 | 381,260 | 59,560 |
| 2012 | 417,220 | 68,950 |

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டின் போது கடல் நீர் மீன் உற்பத்தி அதிகரிப்பு 9.4 சதவீதமாகக் காணப்பட்டதுடன் நன்னீர் மீன் உற்பத்தியின் அதிகரிப்பு 15.8 சதவீதமாகக் காணப்பட்டது.

## 3.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அழகு மீன்களின் வளர்ப்பை விருத்திசெய்வதற்காக 2012 பாதீட்டின் கீழ் இணையதளத்திற்காக ரூபா 1.7 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலவசமாக வைப்புச் செய்வதற்கு தனியார் பிரிவிலிருந்து மீன்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்படுகையில் குறித்த தரத்திற்கு அமைவாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு மீன்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சிறிய குஞ்சுகளை வைத்து மீன்குஞ்சுகளைப் பெற்றுக்கொள்கையில் குளங்களின் இயலளவைக் காட்டிலும் கூடிய சிறிய குஞ்சுகளை வைத்திருந்ததாகக் குறிப்பிட்டு பணம் கோரப்பட்டிருந்தது.

(ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 41 பதவிகளுக்காக ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) தனியார் கம்பனி ஒன்றிற்கு குத்தகைக்கிடப்பட்டிருந்த பொலநறுவை கடல்நீர் மீன்பிடி நிலையம் குறித்த காலம் பூர்த்தியடைவதற்கு முன்னர் 2009 மார்ச் 24 ஆம் திகதி அதிகாரசபையால் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 555,468 தொகை 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவீடு செய்ய முடியாதிருந்தது.

(ஊ) விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள், பிரதேச விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுடாக மீன் குஞ்சுகள் பெறுவதற்கு வழங்கப்பட்ட கடன் அடிப்படையில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 2,028,925 ஆகக் காணப்பட்டதுடன் 2013 மே மாத இறுதியில் உள்ளவாறு மேலும் ரூபா 1,675,596 தொகை அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுக் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக போதிய பதவியணி அங்கீகரிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகள் தொடர்பான நலிவுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள்
(ஆ) முற்பணம்
(இ) கடன் அடிப்படையில் மீன் உற்பத்தி விற்பனை
(ஈ) வரிப் பண அறவீடு
(உ) பதவியணி